# Copy of Deposition

## வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

**அசல் வழக்கு எண் : 48/2019**

**வாதிதரப்பு சாட்சி:1**

பெயர்: மகேஷ்(வா.சா.1 ) நாள்:05.11.2024

த.பெ:

**2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 05ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் ம.பெரியசாமி அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா1 – குறுக்கு விசாரணை (2ம் பிரதிவாதி தரப்பு):-**

நான் இளங்கலை படிப்பு முடித்துள்ளேன். நான் மத்திய அரசு புவியியல் துறையில் பொருள் பாதுகாப்பு அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். எனது தகப்பனார் பெயர் கே.எஸ்.குப்புசாமி ஆகும். என் உடன் பிறந்தவர் 2ம் பிரதிவாதி மற்றும் ஒரு ராம்குமார் ஆவார்கள். தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பே நானும், 2ம் பிரதிவாதி மற்றும் ஒரு ராம்குமார் ஆகியோர்கள் வேறு சொத்தை கிரயம் பெற்றோம் என்றால் சரிதான். அவ்வாறு கிரயம் பெற்ற சொத்துக்கள் தாவா சொத்தின் கிழபுறமாகவும் தென்புறமாகவும் உள்ளது என்றால் சரிதான்.

2. அவ்வாறு தாவா சொத்திற்கு அருகில் கூட்டாக கிரயம்பெற்ற சொத்தை பொருத்தும் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்த வழக்கு கொடுமுடி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.35/2024 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், மேற்படி வழக்கு ஈரோட்டில் இருந்து மாறுதல் ஆகியுள்ளது. நான் கிரயம்பெற்ற சொத்தும், 2ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தும் ஆதியில் ஒரு ராமசந்திர ஐயருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தும் 2ம் பிரதிவாதி கிரயம்பெற்ற சொத்தும் ஆதியில் ஒரே கதவு எண் கொண்ட வீடாக இருந்தது என்றால் சரிதான்.

3. அவ்வாறு இருந்த வீட்டின் கதவுஎண் 26ஏ ஆகும். ராமச்சந்திர ஐயர் காலமான பின்னிட்டு வாதி தரப்பு சான்றாவணம் 1 வாயிலாக பாகம் பிரித்துகொண்டார்கள் என்றால் சரிதான், 2013ல் பாகம் பிரித்துகொண்டார்கள். 18.01.2013 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில்தான் நான் 29.07.2013ல் நான் கிரயம்பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரயம்பெற்ற சொத்தும் மேற்சொன்ன கதவு எண் 26ஏ வீட்டின் ஒரு பகுதி என்றால் சரியல்ல, மூன்றாக பிரிபட்டதில் இரண்டு பகுதிகளை நான் கிரயம் பெற்றேன். நான் கிரயம்பெற்ற சொத்து முழுவதும் மங்களூர் ஓடு போட்ட வீடும் அது சார்ந்த கட்டிடமும் என்றால் சரிதான், அதில் மெட்ராஸ் டெரஸ்ம் உள்ளது.

4. 18.01.2013 தேதியிட்ட பாகபிரிவினையில் ஜானகிக்கு பிரிந்தசொத்தை தான் 2ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான் 2019ம் வருடத்தில் அவர் கிரயம்பெற்றார். 2019ம் வருடத்திய கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. காட்டப்படும் ஆவணம் 2ம் பிரதிவாதி ஜானகியிடம் கிரயம்பெற்ற கிரய ஆவணத்தின் நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை உள்ளதா என்றால் அதில் குறிப்பிட்டுள்ள சங்கதி வேறுபட்டுள்ளதால் ஆட்சேபணை உள்ளது. எனக்கு ஆவணத்தை குறியீடு செய்வதில் ஆட்சேபணை இல்லை. **06.12.2019ம் தேதியிட்ட விஸ்வநாதன் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தின் சார்பதிவக சான்றிட்ட நகல் பிரதிவாதி தரப்பு சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. மேற்படி 06.12.2019ம் தேதியிட்ட கிரய ஆவணப்படி கதவு எண் 26ஏ வீட்டில் ஒரு பகுதியான மேபுற பகுதியான ஏ செட்டியூல் சொத்தை 2ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் குறிப்பிடும் ஏ செட்டியூல் பாகபிரிவினை பத்திரப்படி ஜானகிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 18.012013ம்தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் பொது சரத்துக்களும் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 18.012013ம்தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள பொது சரத்து என்னையும், 2ம் பிரதிவாதியையும் கட்டுப்படுத்தும் என்றால் கட்டுப்படுத்தாது.

6. 2013ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் பொது சரத்தில் 3இலக்கமிட்டவர் பாகத்தில் உள்ள சேந்து கிணற்றில் 1,2 இலக்கமிட்டவர்கள் வந்து தேவையான தண்ணீரை எடுத்துக்கொள்ள உரிமை உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2013ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் 1,2 இலக்கமிட்டவர்கள் குடிநீர் வசதி செய்யும் வரை சேந்து கிணற்றில் தேவையான தண்ணீரை எடுத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது தற்காலிகமாக கொடுக்கப்பட்ட ஏற்பாடாகும். 2013ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள பொது சரத்து என்னையும் 2ம் பிரதிவாதியையும் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான்.

7. 2ம் பிரதிவாதி சொத்தில் எந்தவித தண்ணீர் வசதியும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். சேந்து கிணற்றை தற்போது மூடுகல் போட்டு மூடியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சேந்துகிணற்றில் தற்போது அங்கு குடியிருப்போர் மின்மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து வருகிறார்கள் என்றால் சரிதான், ஆதியில் கிரயம் கொடுத்தவர்கள் முதல் அவ்வாறுதான் தண்ணீர் எடுத்து வரப்படுகிறது. நான் வழக்கிற்காக கிரயம் கொடுத்தவர்கள் மின்மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. நான் கிரயம் பெற்ற சொத்தில் வேறு ஒருவர் வாடகைக்கு உள்ளார். வாடகைக்கு உள்ளவர் மட்டும்தான் தற்போது சேந்து கிணற்றில் மின்மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. வேறு யார் சேந்து கிணற்றில் தண்ணீர் எடுத்துவருகிறார்கள் என்றால் மின்மோட்டார் வைத்து எல்லாரும் எடுத்து வருகிறார்கள். எல்லாரும் என்பது நான் வாடகைக்கு வைத்துள்ளவர்கள் ஆவார்கள். தாவா பாதையை அளவீடுசெய்ய 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் தொலைபேசியிலும் கூறினேன், நேரிலும் கூறினேன், எழுத்து மூலமாக கொடுக்கவில்லை. 1ம் பிரதிவாதியின் சொத்தை அடைய வேண்டி இந்த வழக்கில் பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

9. 3ல்2 பாகத்தை கிரயம் பெற்றுள்ள நான் சொத்தை அளவீடுசெய்ய வருவாய் துறையினரிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு கிரயம்கொடுத்தவர்களே அளவீடு செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் அவர்கள் பிரித்தபடி எனக்கு பிரித்துகொடுத்துவிட்டார்கள். தாவா பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் தாவா தடத்தின் நீள, அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது வசதிக்கேற்ப தாவா வரைபடம் வரையப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு மூல ஆவணங்களுக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2013ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் பி அட்டவணை தடத்தின் தொடர்ச்சியாக ஏ அட்டவணை 1ம் இன சொத்தின் வடகோட்டில் தாவா 2ம் இன சொத்து வரை விடப்பட்டுள்ள 3 அடி அகல தடத்தினை உள்நோக்கோடு தாவா வரைபடத்திலோ தாவாவிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

10. உண்மையில் கிழகோடு வரை தடம் இருந்தால் தான் சேந்து கிணற்றிற்கு செல்ல இயலும் என்றால் தற்காலிகமாக அவ்வாறு தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு உள்ள சேந்து கிணற்றிற்கு செல்ல வேண்டும் என்றால் எனது பாகத்தில் உள்ள வீட்டின் கதவை திறந்துகொண்டுதான் செல்லவேண்டும் என்றால் சரிதான் அவ்வாறு உள்ள கதவு சந்து போல் உள்ள பகுதிக்கு செல்வதற்காகத்தான் வைக்கப்பட்டுள்ளது. வெளிஆட்கள் உள்ளே வராமல் இருக்க சந்தின் கிழகோட்டு பகுதியில் மேற்படி கதவு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது என்னால் வைக்கப்பட்டது. நான் மேற்சொன்னவாறு கதவை அமைத்துக்கொண்டதால் 2ம் பிரதிவாதியில் சேந்து கிணற்றிற்கு சென்று தண்ணீர் எடுத்து வர இயலவில்லை என்றால் சரியல்ல.

11. 2ம் பிரதிவாதி கிரயம்பெற்ற முன்பகுதியில் இருந்து செல்லும் 3 அடி அகல தடத்தின் வழியாகத்தான் நான் வாடகைக்கு குடியமர்த்தியுள்ள நபர்கள் எந்த இடையூறும் இல்லாமல் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகிறார்கள் என்பதற்காகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன வழியில் தான் பிரதிவாதிகள் பழைய சாமான்களை போட்டு வழியை அடைத்துவிட்டார்கள். வழியில் பழைய சாமான்களை பிரதிவாதிகள் போட்டு அடைத்து

இடையூறு செய்தார்கள் என்று வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது தான் முதன்முறையாக மேற்சொன்னவாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல.

12. சேந்து கிணற்றை மூடுவதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு முன்னறிவிப்பு ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் தான் தாவா பாதையை கதவு வைத்து அடைத்து விட்டு சேந்து கிணற்றை மூடுகல் போட்டு மூடிவிட்டு பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா பி செட்டியூல் பாதையில் பிரதிவாதிகள் எனக்கோ என்னை சார்ந்தவர்களுக்கோ எவ்விதத்திலும் இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை தடத்தில் எனக்கு என்ன உரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதை சொல்லாமல் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

13. தாவா பி அட்டவணை பாதையில் என்னுடையது உரிமை மறுக்கப்பட்டது என்று கூறியுள்ள நிலையில் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் இருந்து 2ம் பிரதிவாதி 06.02.2019 அன்று உரிய பிரதிபலன் பேரில் நிலுவையில் இருந்த வழக்கு விவரம் தெரியாமல் தான் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் இருந்து 2ம் பிரதிவாதி வாங்கிய கிரய பத்திரத்தில் 2013ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபொது சரத்துக்களுக்கு உட்பட்டே எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிரயம் குறித்து எனக்கு தெரியாது.

14. 2ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய தேதி முதல் தனிப்பட்ட குடிநீர் வசதி இல்லாத காரணத்தால் தாவா ஏ அட்டவணை 2ம் இன சொத்தில் உள்ள சேந்து கிணத்து தண்ணீரை தான் பயன்படுத்தி வந்தார் என்றால் சரியல்ல, தற்போது வரை அவர் வாங்கிய சொத்துக்கு குடிவர வில்லை காலியாகத்தான் உள்ளது. 2ம் பிரதிவாதி வாங்கிய சொத்தில் போதுமான வசதி இல்லாத காரணத்தால்தான் 2ம் பிரதிவாதி தற்போது அங்கு குடிவர இயலவில்லை என்றால் சரியல்ல, போதிய வசதிகளை செய்து கொள்ள பத்திரத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது. 2023ம் வருடம் பிப்ரவரி 3வது வாரத்தில் தாவா ஏ அட்டவணை 2ம் இன சொத்தான கிணற்றை மூடுகல் போட்டு மூடி தனிப்பட்ட முறையில் மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல, எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் அனுபவித்து வருகிறேன்.

15. நான் இன்றைய தேதி வரை 2ம் பிரதிவாதிக்கு உள்ள உரிமைகளை நான் மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கோரியுள்ள எதிர் கோரிக்கை பரிகாரம் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல. நான் முன்னறிவிப்பு ஏதும் கொடுக்காததற்கு காரணமே 2ம் பிரதிவாதி சேந்து கிணத்தை உபயோகிப்பதை தடுப்பதற்கே என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

VELLINGIRI LOGANATHAN

Digitally signed by VELLINGIRI LOGANATHAN
Date: 2024.11.05 15:28:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.